# March 27, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்தியா, ரஷியா, சீனா, பாகிஸ்தான், இராக் ஆகிய 5 நட்பு நாடுகளின் கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணையைக் கடக்க அனுமதி அளிப்பதாக ஈரான் அறிவித்துள்ளது.

(i) இந்தியா தனது எரிசக்தி கொள்முதலுக்கு மேற்காசிய பிராந்தியத்தை வெகுவாக சார்ந்துள்ள நிலையில், ஈரானின் இந்த அறிவிப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

(ii) ஈரான் மீது இஸ்ரேல்-அமெரிக்க கூட்டுப் படை கடந்த பிப். 28-இல் நடத்திய தாக்குதலில் அந்நாட்டின் தலைமை மதகுரு அயதுல்லா அலிகமேனி மற்றும் பல்வேறு அமைச்சர்கள் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து, இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்கள் மீது ஈரான் தாக்குதல் தொடுத்தது.

(iii) கச்சா எண்ணெய்-எரிவாயு ஏற்றுமதிக்கு முக்கிய வழித்தடமான ஹோர்முஸ் நீரிணையையும் ஈரான் மூடியுள்ளதால், கச்சா எண்ணெய்– எரிவாயு ஏற்றுமதியில் பெரும் தடங்கல் ஏற்பட்டுள்ளது. இது பல நாடுகளில் எரிபொருள் தட்டுப்பாட்டுக்கும், விலையேற்றத்துக்கும் காரணமாகியுள்ளது.

2. உக்ரைன் போரில் ரஷியாவுக்கு ஆதரவளித்துவரும் வடகொரியா மற்றும் பெலாரஸ் நாடுகளுக்கு இடையே புதிய நட்பு ஒப்பந்தம் கையொப்பமானது.

(i) சுமார் 33 ஆண்டுகால தனது ஆட்சி காலத்தில் முதன்முறையாக வடகொரியவுக்கு அரசு முறைப்பயணம் மேற்கொண்டுள்ள பெலாரஸ் அதிபர் அலெக்சாண்டர் லூகாஷென்கோவிற்கு, பியாங்யாங்கில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

(ii) வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னுடனான சந்திப்பின் போது, அதிபர் லூகாஷென்கோ அவருக்கு நவீன ரக தானியங்கி துப்பாக்கியைப் பரிசளித்தார்.

(iii) சர்வதேச தடைகளை எதிர் கொண்டு வரும் இவ்விரு நாடுகளும் தற்போது ராணுவம் மற்றும் பொருளாதார ரீதியாக கைகோத்திருப்பது உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

(iv) மேற்கத்திய நாடுகளின் அழுத்தங்களுக்கு எதிராக இரு நாடுகளும் ஒன்றிணைந்து செயல்படப் போவதாக கிம் ஜோங் உன் இச்சந்திப்பின்போது உறுதிபடத் தெரிவித்தார்.

(v) அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் சுமுக உறவைப் பேண லூகாஷென்கோ முயற்சி செய்து வரும் அதேநேரம், வடகொரியாவுடனான இப்புதிய நெருக்கம் பெலாரஸ் அரசியலில் புதிய விவாதங்களை ஏற்படுத்தியுள்ளது.

3. பிரான்ஸில் வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள ஜி7 நாடுகளின் உச்சி மாநாட்டில் பங்கேற்க இந்தியா, தென்கொரியா, பிரேஸில், கென்யா ஆகிய நாடுகளுக்கு அதிகாரபூர்வமாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆனால், சீனா இந்த அழைப்பை ஏற்க மறுத்து, மாநாட்டைப் புறக்கணித்துள்ளது.

(i) நடப்பாண்டு ஜி7 கூட்டமைப்பின் தலைமைத்துவ நாடாக, உலகம் முழுவதும் ஏற்பட வாய்ப்புள்ள பொருளாதார நெருக்கடியைத் தடுப்பதே பிரான்ஸின் முதன்மை நோக்கமாகக் கருதப்படுகிறது.

(ii) இதையொட்டி சீனா தனது உள் நாட்டுத் தேவையை அதிகரித்து, மற்ற நாடுகளின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் வகையிலான அளவுக்கு அதிகமான ஏற்றுமதியைக் குறைக்க வேண்டும்.

(iii) அதேபோல், அமெரிக்கா தனது நிதிப்பற்றாக்குறையைக் குறைக்க வேண்டும் என்றும், ஐரோப்பிய நாடுகள் சேமிப்பைக் குறைத்து உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்றும் பிரான்ஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

(iv) இருப்பினும், இத்தகைய நீண்ட காலத் திட்டங்களுக்குத் தற்போதைய சர்வதேச சூழல் பெரும்

சவாலாக உருவெடுத்துள்ளது. மத்திய கிழக்கு போரினால் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு மாநாட்டின் முக்கிய விவாதப் பொருளாக மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(v) இது குறித்து பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரானின் ஆலோசகர் ஒருவர் கூறுகையில், 'ஜூன் மாதத்துக்குள் ஈரான் விவகாரம் எத்தகைய நிலையை எட்டும்என்று தெரியாது. ஆனால், அதன் பொருளாதார மற்றும் எரிசக்தி பாதிப்புகளுக்குத் தீர்வுகாண வேண்டியது அவசியம்' என்றார்.

(vi) ஜூன் 15 முதல் 17 வரை நடை பெறவுள்ள இந்த மாநாட்டுக்கு சீனாவையும் அழைக்க பிரான்ஸ் முயற்சித்தது. இருப்பினும், ஜி7 கூட்டமைப்பை 'பணக்கார நாடுகளின் குழு' என்று விமர்சித்து வரும் சீனா, இதில் பங்கேற்கப் போவதில்லை எனத் தெரிவித்துவிட்டது.

(vii) அதேபோல், இறக்குமதி வரி விவகாரத்தில் பிரான்ஸுடன் மோதலில் ஈடுபட்டுள்ள அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், இந்த மாநாட்டில் கலந்து கொள்வாரா என்பது இன்னும் உறுதியாகவில்லை.

4. நேபாள நாடாளுமன்றத் தேர்தலில் ராஷ்ட்ரீய சுதந்திர கட்சியின் (ஆர்எஸ்பி) வரலாற்று வெற்றியைத் தொடர்ந்து, அக்கட்சியின் பாலேந்திர ஷா பாலன் (35) நாட்டின் மிக இளம் வயது பிரதமராக வெள்ளிக்கிழமை (மார்ச் 27) பதவியேற்கிறார்.

(i) நேபாளத்தில் கடந்த ஆண்டு நடந்த இளைஞர் போராட்டங்களுக்குப் பிறகு இம்மாதத் தொடக்கத்தில் நடந்த பொதுத்தேர்தலில் மொத்தம் உள்ள 275 இடங்களில், 182 இடங்களைக் கைப்பற்றி ஆர்எஸ்பி தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கிறது.

(ii) இந்நிலையில், ஆர்எஸ்பி நாடாளுமன்றக் குழு வியாழக்கிழமை கூடி, பாலேந் திர ஷாவைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தது. 'ராப்' இசைப் பாடகராக இருந்து அரசியல்வாதியாக மாறிய இவர், மாதேஷ் பிராந்தியத்திலிருந்து பிரதமராகும் முதல் நபர் என்ற பெருமையைப் பெறுகிறார்.

(iii) நேபாளி காங்கிரஸ், இடது சாரி கட்சிகள் போன்ற பாரம்பரிய கட்சிகளை வீழ்த்தி இந்த மகத்தான வெற்றியைப் பெற்ற பாலேந்திர ஷா, முன்னாள் பிரதமர் கே.பி.சர்மா ஒலியை ஜாப்பா-5 தொகுதியில் சுமார் 50,000 வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

(iv) நேபாள அதிபர் மாளிகையில் நடைபெறும் சிறப்பு நிகழ்வில் அதிபர் ராம்சந்திர பௌடேல், பாலேந்திர ஷாவுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார். தொடர்ந்து, 15 முதல் 18 அமைச்சர்களைக் கொண்ட சிறிய அமைச்சரவையை அமைப்பார் பாலேந்திர ஷா என எதிர்பார்க்கப்படுகிறது.

5. இந்தியாவின் முன்னணி தகவல் தொழில்நுட்ப சேவை நிறுவனமான இன்ஃபோசிஸ், அமெரிக்காவைச் சேர்ந்த 'ஆப்டிமம் ஹெல்த்கேர் ஐடி', 'ஸ்ட்ரேட்டஸ்' ஆகிய 2 நிறுவனங்களை சுமார் ரூ.5,260 கோடி மதிப்பீட்டில் கையகப்படுத்த உள்ளதாக அறிவித்துள்ளது.

(i) இதில் சுகாதாரத் துறை எண்ம மாற்றத்தில் முன்னணியில் உள்ள ஆப்டிமம் நிறுவனத்தை 46.5 கோடி டாலருக்கும், காப்பீட்டுத் துறை தொழில்நுட்ப நிறுவனமான ஸ்ட்ரேட்டஸை 9.5 கோடி டாலருக்கும் வாங்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

(ii) ஆப்டிமம் ஹெல்த்கேர் ஐடி நிறுவனமானது, மருத்து வமனைகள் மற்றும் சுகாதார அமைப்புகளுக்கு எண்ம தீர்வுகளை வழங்குவதில் சிறந்து விளங்குகிறது. இது குறித்து பேசிய இன்ஃபோசிஸ் சிஇஓ சலில் பரேக், 'ஆப்டிமம் நிறுவனத்தின் நிபுணத்துவமும், இன்ஃபோசிஸின் தொழில்நுட்ப வலிமையும் இணைந்து சுகாதாரத் துறையில் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கும்' என்று நம்பிக்கை தெரிவித்தார்.

(iii) அதேபோல், காப்பீட்டுத் துறையில் இயங்கும் 'ஸ்ட்ரேட்டஸ்' நிறுவனத்தை வாங்குவதன் மூலம் சொத்து மற்றும் விபத்துக் காப்பீடு பிரிவில் இன்ஃபோசிஸ் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட உள்ளது. வரும் ஜூன் மாதத்துக்குள் இந்த முதலீடுகளின் வணிக நடவடிக்கைகள் முழுமையாக

நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

6. இந்தியாவில் சுகாதார காப்பீட்டுத் துறை, கடந்த 2024-25 நிதியாண்டில் சுமார் 9 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. இதன்மூலம், மொத்த பிரீமியம் வசூல் ரூ.1.2 லட்சம் கோடி என்ற இலக்கைத் தாண்டி சாதனை படைத்துள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

(i) இது குறித்து நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'மக்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு, மருத்துவச் செலவுகளுக்கான நிதிப் பாதுகாப்பு தேவை என்ற எண்ணம் மற்றும் எளிய காப்பீட்டு வசதிகள் போன்ற காரணங்களால் இத்துறை அசுர வளர்ச்சியை எட்டியுள்ளது.

(ii) வயது முதிர்ந்த காப்பீட்டுதாரர் எண்களின் ணிக்கை அதிகரிப்பு, கூடுதல் காப்பீட்டுத் தொகை மற்றும் மேம்படுத் தப்பட்ட வசதிகள் காரணமாக பிரீமியம் தொகையும் அதிகரித்துள்ளது. காப்பீட்டு தாரர்களுக்கு விரைவான சேவை கிடைப்பதை உறுதி செய்ய 'ரொக்கமில்லா சிகிச்சை' நடைமுறைக்கு காப்பீடு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (ஐஆர்டிஏஐ) காலக்கெடுவை நிர்ணயித்துள்ளது.

(iii) மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 1 மணி நேரத்துக்குள் முன் அனுமதி வழங்கப்பட வேண்டும். சிகிச்சை முடிந்து டிஸ்சார்ஜ் செய்யப்படும்போது 3 மணி நேரத்துக்குள் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

(iv) தரவுகளின்படி, 2024-25 நிதியாண்டில் காப்பீடு தொடர்பாக 1,37,361 புகார்கள் வரப்பெற்றன. இதில் 1,27,755 (93 சதவீத) புகார்கள் அதே ஆண்டில் தீர்க்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

(v) ஒட்டுமொத்தமாக, காப்பீட்டு நிறுவனங்கள் வெளிப்படைத் தன்மையுடன் செயல்பட வேண்டும் என்றும், காப்பீட்டுதாரர்களின் நம்பிக்கையை வலுப்படுத்தும் வகையிலும் ஐஆர்டிஏஐ தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. பாட்மின்டன் விளையாட்டில் பிரபலமானவரும், ஒரு ஒலிம்பிக் தங்கம் மற்றும் 3 உலக சாம்பியன்ஷிப் கரோலினா பட்டங்கள் வெற்றவருமான ஸ்பெயினின் கரோலினா மரின் ஓய்வு பெறுவதாக அறிவித்தார். தொடர்ந்து முழங்கால் காயம் கண்டு வந்த நிலையில் அவர் இந்த முடிவை மேற்கொண்டுள்ளார்.

8.சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் (ஐஓசி) புதிய கொள்கையின்படி, ஒலிம்பிக் போட்டிகளில் மகளிர் பிரிவில் பங்கேற்க திருநங்கைகளுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. திருநங்கைகளை வகைப்படுத்துதல் தொடர்பாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கொண்டுவந்த நிர்வாக ரீதியிலான உத்தரவின் அடிப்படையில் இந்த மாற்றத்தை ஐஓசி செய்துள்ளது. அடுத்த ஒலிம்பிக் போட்டி 2028-இல் அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

9.இந்தியாவின் 11 வயது ரேஸிங் வீராங்கனையான அட்டிகா மிர், டபிள்யூஎஸ்கே சூப்பர் மாஸ்டர்ஸ் சீரிஸ் கார்டிங் பந்தயத்தின் 5-ஆவது சுற்று ஃபைனலில் 8- ஆவது இடம் பிடித்தார்.

10. ஆஃப்கான் கோப்பை கால்பந்து சாம்பியன் பட்டம் தங்களிடம் இருந்து பறிக்கப்பட்டு, மொராக்கோ அணிக்கு வழங்கப்பட்டதற்கு எதிரான முறையீட்டை விளையாட்டுகளுக்கான சர்வதேச நீதிமன்றத்தில் செனெகல் அணி பதிவு செய்துள்ளது.

11. நாட்டின் எந்தப் பகுதியிலும் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயுக்கு தட்டுப்பாடு இல்லை; அடுத்த 60 நாள்களுக்குத் தேவையான பெட்ரோல்-டீசல் மற்றும் கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளது' என்று மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் விளக்கமளித்தது. எல்பிஜி சமையல் எரிவாயுவை பொருத்தவரை அடுத்த ஒரு மாதத்துக்குத் தேவையான விநியோகம் உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

(i) எரிபொருள் தட்டுப்பாடு பீதியில், பெட்ரோல் நிலையங்களுக்கு மக்கள் படையெடுப்பதாக தகவல்கள் வெளியான நிலையில், மேற்கண்ட விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு என்ற கூற்றை நிராகரித்துள்ள மத்திய அரசு, இது உள்நோக்கம் கொண்ட பொய்

பிரசாரம் என்று சாடியுள்ளது. இது தொடர்பாக மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

- உலக அளவில் எண்ணெய் சுத்திகரிப்பில் 4-ஆவது பெரிய நாடாகவும், பெட்ரோலியப் பொருள்கள் ஏற்றுமதியில் 5- ஆவது பெரிய நாடாகவும் உள்ள இந்தியா, உள்நாட்டில் எரிபொருள் இருப்பை உறுதி செய்துள்ளதுடன், 150-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான விநியோகத்தையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

(i) நாட்டில் எல்பிஜி சமையல் எரிவாயு விநியோகத்திலும் எந்தத் தட்டுப்பாடும் இல்லை. தினசரி உள்நாட்டு உற்பத்தி 40 சதவீதம் உயர்த்தப்பட்டு, 50,000 டன்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது, நாட்டின் தினசரி தேவையில் (80,000 டன்) 60 சதவீதத்துக்கும் அதிகமானதாகும். தினசரி இறக்குமதி தேவை 30,000 டன்கள் மட்டுமே.

- உள்நாட்டு உற்பத்தி உயர்வுடன், 8 லட்சம் டன் எல்பிஜி இறக்குமதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அமெரிக்கா, ரஷியா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து இந்தியாவில் உள்ள 22 எல்பிஜி முனையங்களுக்கு இவை வந்தடைந்து கொண்டிருக்கின்றன. இந்த நடவடிக்கைகளால் ஒரு முழு மாதத்துக்குத் தேவையான எல்பிஜி விநியோகம் உறுதி செய்யப்பட்டுள்ளது.
- எண்ணெய் நிறுவனங்கள் தினமும் 50 லட்சத் துக்கும் மேல் எல்பிஜி சிலிண்டர்களை வெற்றிகரமாக விநியோகித்து வருகின்றன. மக்களிடையே ஏற்பட்ட பீதியால் 89 லட்சமாக அதிகரித்த எல்பிஜி முன்பதிவு, இப்போது மீண்டும் 50 லட்சமாக குறைந்துள்ளது' என்று மத்திய அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

12. மக்களவை மற்றும் மாநிலச் சட்டமன்றங்களில் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்துவதற்கான அவசரத் தேவை.

(i) சட்டப் பின்னணி (2023)

- சட்டத் திருத்தம்: 2023-ஆம் ஆண்டில், மக்களவை மற்றும் மாநிலச் சட்டமன்றங்களில் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு வழங்கும் வகையில், "நாரி சக்தி வந்தன் அதினியம்" (Nari Shakti Vandan Adhiniyam) என அறியப்படும் 106-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றியது.
- புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தில் நடைபெற்ற முதல் அமர்வின்போது, இந்த இட ஒதுக்கீடு உடனடியாகச் செயல்படுத்தப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.
- இருப்பினும், புதிய மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அதைத் தொடர்ந்து தொகுதி மறுவரையறை (தொகுதிகளைச் சீரமைத்தல்) பணிகள் நிறைவடைந்த பின்னரே இந்த இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்த முடியும் என்று அச்சட்டத்தின் 5-வது பிரிவு குறிப்பிட்டிருந்தது.

(ii) சமீபத்திய நிகழ்வுகளும் கலந்தாய்வுகளும் (மார்ச் 2026)

- புதிய மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகள் இன்னும் நிலுவையில் உள்ள நிலையில், புதிய புள்ளிவிவரங்களுக்காகக் காத்திருக்காமல், 2011-ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்புத் தரவுகளின் அடிப்படையில் இந்த இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை மத்திய அரசு தற்போது ஆராய்ந்து வருகிறது.
- இந்த இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்துவது குறித்து விவாதிப்பதற்காக, பாஜக, ஒய்.எஸ்.ஆர் காங்கிரஸ், என்.சி.பி (சரத் பவார் பிரிவு), சிவசேனா (UBT) மற்றும் முஸ்லிம் லீக் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளுடன் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா சமீபத்தில் ஒரு கலந்தாய்வுக் கூட்டத்தை நடத்தினார்.
- காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், திமுக மற்றும் சமாஜ்வாதி கட்சி ஆகியவற்றுடன் கூடுதல் கலந்தாய்வுக் கூட்டங்களை நடத்த அடுத்த வாரம் திட்டமிடப்பட்டுள்ளது.

(iii) முன்மொழியப்பட்டுள்ள கட்டமைப்பு மாற்றங்கள்

- பரிசீலனையில் உள்ள ஒரு முக்கிய முன்மொழிவு என்னவென்றால், மக்களவையின் மொத்த இடங்களின் எண்ணிக்கையை 543-லிருந்து 816-ஆக உயர்த்துவதாகும்.
- இத்திட்டத்தின் கீழ், அதிகரிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு (272 இடங்கள்) பெண்களுக்கு ஒதுக்கப்படும்.
- பெண்களுக்கான இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்தும் அதே வேளையில், தற்போது ஆண்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் இடங்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துவிடாமல் இருப்பதை உறுதிசெய்யும் வகையில், மக்களவை மற்றும் மாநிலச் சட்டமன்றங்கள் ஆகிய இரண்டிலும் உள்ள இடங்களின் எண்ணிக்கையை 50% அதிகரிக்க வேண்டும் என்று சிலர் பரிந்துரைக்கின்றனர்.

(iv) காலவரையறையும் செயலாக்க இலக்குகளும்

- 2029-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்குள் இந்த இட ஒதுக்கீட்டு முறையைச் செயல்பாட்டிற்குக் கொண்டுவர அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.
- வரலாற்று ரீதியாகப் பல ஆண்டுகள் எடுத்துக்கொள்ளும் (2002-ஆம் ஆண்டின் மறுவரையறை ஆணையம் 6 ஆண்டுகள் எடுத்துக்கொண்டது) வழக்கமான தொகுதி மறுவரையறை நடைமுறையை அரசு கண்டிப்பாகப் பின்பற்றினால், இந்த இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்துவது 2034-ஆம் ஆண்டுத் தேர்தல்கள் வரை தள்ளிப்போகக்கூடும்.
- தற்போதைய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஏப்ரல் 2-ஆம் தேதியுடன் முடிவடைவதால், மேலும் தாமதம் ஏற்படாமல் இருப்பதை உறுதிசெய்யத் தேவையான சட்டத் திருத்தங்களை நிறைவேற்றுவதற்காக அரசாங்கம் ஒரு சிறப்புக் கூட்டத்தொடரைக் கூட்டக்கூடும்.

(v) கண்டறியப்பட்ட இடைவெளிகள் மற்றும் அரசியல் கவலைகள்

- சமாஜ்வாதி கட்சி மற்றும் ஆர்ஜேடி போன்ற கட்சிகள், பட்டியல் சாதி/பழங்குடியினப் பெண்களுக்கு இட ஒதுக்கீடு இருக்கும்போது, பெண் மக்கள்தொகையில் ஏறக்குறைய 40% ஆக உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (ஓபிசி) குறிப்பிட்ட துணை இட ஒதுக்கீடு எதுவும் இல்லை என்று சுட்டிக்காட்டியுள்ளன.
- மாநிலங்களவை மற்றும் மாநில சட்டசபைகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து 2023-ஆம் ஆண்டு சட்டம் மௌனம் காக்கிறது.
- அரசாங்கத்தின் இந்த திடீர் அவசரம் வரவேற்கத்தக்கதாக இருந்தாலும், அது இந்த இடைவெளிகளைக் களைந்து, அமலாக்கம் 2034 வரை தாமதமாகாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்